# துணை செய்ய வேண்டல்

ஊசி வழிபல ஓடம் வருமென
ஆசை தனில் மனம் அலைவேனே
காசு வளர்ந்திடு மேசை செடியது
நூறு விதைத்திட முயல்வேனே

ஆழி நுரையென காதற் கனவுகள்
தேடி நிதநிதெம் திரிவேனே
யோகி ராம் சுரத்குமார் ஸ்வாமி
வரையறை செய்வாயே

வீணை மொழியினில் மோக கவிதைகள்
பாணனென தினம் பகர்வேனே
பானை நீரினில் மூழ்கும் ஒலியென
நீதி பலரிடம் படிப்பேனே

பூனை என் மனம் பாலை துறந்திடும்
வேளை ஒரு தினம் வருமாமோ
யோகி ராம் சுரத்குமார் ஸ்வாமி
எனை சரி செய்வாயே

பூசை இதுவென வாசி இதுவென
பேசி பலரிடம் திமிராலே
வீசை நிறையென லாபம் பெறவென
நேசம் திறம்பட செய்வேனே

ஓசை அறுமனம் ஆசை அறு உயர்
தேசும் எனக்கினி வளராதோ
யோகி ராம் சுரத்குமார் ஸ்வாமி
எனக்கிதை அருள்வாயே

தாசனென உனக்கான எனதிடம்
தூசு படிவது முறையாமோ
வீசு புயலென ஆசை பலவகை
பாசி மனதினில் படலாமோ

மாசு துடைத்திடு மாயம் தெரித்திட
கூவி தினம் உனை அழைப்பேனே
யோகி ராம் சுரத்குமார் ஸ்வாமி
எனக்கிதைச் செய்வாயே

நாத கடலினில் வேத கருப்பொருள்
காதில் நிறைந்திட அருள்வாயே
நாளும் உனக்கருகாமை உணர்ந்திடு
ஞான திறமையைத் தருவாயே

ஆவி குளிர்ந்திடும் ஆதி அறிந்திட
மார்க்கம் எதுவென பகர்வாயே
யோகி ராம் சுரத்குமார் ஸ்வாமி
மனம் கனிந்தருள்வாயே